[12th September 1958

THE HON. SRI V. RAMAIAH : பக்கத்திலுள்ள மாகாணத்தில் என்ன செய்கிருர்கள் என்று எனக்குச் சரியாகத் தெரியாது. இங்கேயுள்ள முறைகளைப் பற்றி அடிக்கடி பரிசீலனை நடத்தி வருகிறேம். இப்போது பெரிய டாக்ஸி யில் ஐந்து பேர்களை அனுமதித்திருக்கிறேம். பேபி டாக்ஸியிலும் நான்கு பேர்களை அனுமதிக்க முடியுமா என்பதைப் பரிசீலனை செய்து கொள்ள லாம்.

SRI V. SANKARAN: மொபசல் பிரதேசங்களில் உள்ள டாக்ஸிகளில் மீட்டர்கள் இல்லாத காரணத்தால் விசேஷ காலங்களில் அவர்கள் அதிக பணம் கேட்கிருர்கள். மதுரை போன்ற இடங்களில் உள்ள டாக்ஸிகளிலும் மீட்டர்கள் அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH : A separate question may be put.

Irrigation

* 203-D *Q*.—SRI M. C. MUTHUKUMARASWAMY : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா—நன்னிலம் தாலுகா—உபயவேதாந்தபுரம் பாச் சக்கால் வாய்க்கால் வெட்டிக் கொடுக்கவேண்டுமென தஞ்சை காவிரி டிவிஷன் எக்ஸிக்கூடிவ் இன்ஜினியர் அவர்களுக்கு மனு கிடைத்ததா ? எப்போது ?

(ஆ) அதன் மீது இதுவரை எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

(இ) அதற்காக ஒதுக்கியுள்ள தொகை என்ன ?

(ஈ) அவ்வேலை எப்போது முடிவடையும் ?

THE HON. SRI P. KAKKAN : (அ) கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடும் பாய்ச்சக்கால் நூலாற்றின் வலது கரையில் மைல் 82-6-ல் துவங்கும் பாலூர் பாய்ச்சக் காலாக இருக்கவேண்டும். ஏனென்ருல் அந்த ஒரே பாய்ச்சக்கால்தான் உபயவேதாந்தபுரத்திற்கும் மற்றும் மூன்று கிராமங்களுக்கும் தண்ணீர் பாய்ச்சுகிறது. அப்படியானுல், அதைப்பற்றிய ஒரு மனு ஜூன் 1958-ல் கிடைத்தது.

(ஆ) அந்த வாய்க்காலை வெட்டிக் கொடுக்கும் வேலை ஜூன் 1958-ல் மேற்கொள்ளப்பட்டது.

(இ) ரூபாய் 2,200.

(ஈ) அது முடிவடைந்துவிட்டது.

SRI M. C. MUTHUKUMARASAMY : இந்த மாதிரி பாய்ச்சல் வாய்க்கால் களை அரசாங்கம் எடுத்து நடத்தவேண்டுமென்று உத்தரவு போடும்போது அதி காரிகள் அதை உடனே எடுத்து நடத்தப் பல தகராறுகளை எழுப்புகிருர்கள். முடியாது என்கிருர்கள். அந்த மாதிரி நிகழாதபடி துரிதமாக அவ் வேலையை எடுத்து நடத்த உத்தரவிடுவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : வேலைகளைக் குறித்த நேரத்தில் செய்ய வேண்டுமென்பதுதான் கட்டளை. குறிப்பாக எவ்விடத்திலாவது அதிகாரி கள் தடங்கல் செய்வது பற்றிக் குறிப்பிட்டால் கவனிக்கப்படும்.

Rubber

* 203-E *Q*.—SRI T. T. DANIEL : Will the Hon. Minister for Industries be pleased to state—

(*a*) the area under rubber plantation in the State;

(*b*) the quantity of rubber exported from this State during the last two years; and

(*c*) the amount of sales tax collected on rubber last year.